# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 117 இதழ் : 19 08–11–1991 ( நவ. 08 — நவ. 22 ) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50


### மகாநாடு

சென்ற ஆண்டு திருத்தந்தையால் அறிவிக்கப்பட்ட ஐரோப்பிய ஆயர்களுக்கான மகாநாடு நவம்பர் 28 முதல் டிசம்பர் 14 வரை வத்திக்கானில் நடைபெற உள்ளது. கொம்யூனிசத்தினதும் மாக்சிசத்தினதும் வீழ்ச்சியின்பின் பலவந்தமாக புகுத்தப்பட்ட சித்தாத்தங்களிலிருந்து விடுபடும் மக்களுக்கு திருச்சபை ஆற்றவேண்டிய பணி பற்றி ஆயர்கள் சிந்திக்கவுள்ளனர்.

## மாஸ்கோவில் ஹெல்சின்கி உடன்படிக்கை கூட்டத்தொடரில் பேராயர் டூரான் கருத்துரை

# ஐரோப்பா ஒன்றுபட்டால் வளமான எதிர்காலம் இல்லையேல் ஐரோப்பாவே அழிந்துவிடும்

ஹெல்சின்கி உடன்படிக்கையின் 3 வது கூட்டத் தொடர் செப்ரெம்பர் 10ஆம் நாள் மாஸ்கோவில் நடைபெற்றபோது மந்திரிகள் மட்டத்திலான மகாநாட்டில் கத்தோலிக்க திரு ஆட்சிப்பீடத்தின் சார்பில் பேராயர் ஜீன் லூயிஸ் டூரான் கருத்துரை வழங்குகையில் மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள ஜனநாயக போக்குகளைப் பாராட்டி ஐரோப்பா, அமெரிக்கா, கனடா ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய (CSCE) Conference On Security And Co-operation In Europe ஐரோப்பிய ஒத்துழைப்பு பாதுகாப்புக்கான மகாநாடு உறுப்பினர்கள் ஒன்றுபட்டால் அவர்களுக்கு எதிர்காலம் உண்டு என்றும் இல்லையேல் அவர்கள் இல்லாது போய்விடுவர் என்றும் கூறினார்.

1989 ஜூன்மாதம் பாரிசிலும் 1990 ஜூனில் கோபன்ஹேகனிலும் நடைபெற்ற ஹெல்சின்கி உடன்படிக்கை தொடர்பான கூட்டத்தொடரின் மந்திரிகள் மட்டத்திலான மகாநாடு செப்ரெம்பர் 10ஆம் நாள் மாஸ்கோவில் நடைபெற்றபோதுரஷ்ய ஜனாதிபதி மிகாயில் கோர்பெச்சோவ் தலைமை தாங்க வத்திக்கானின் வெளியுறவுச் செயலாளர் பேராயர் ஜீன் லூயிஸ் டூரான் "ஐரோப்பா ஒன்றுபட்டால் வளமான எதிர்காலம் உண்டு இல்லையேல் ஐரோப்பாவே அழிந்துவிடும்' என்றும் கருத்துத் தெரிவித்தார்.

மதச் சுதந்திரத்தின் அவசியத்தைப் பற்றியும் வலியுறுத்திய பேராயர்அவர்கள் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பற்றியும் கருத்துச் சுதந்திரம், பொருளாதாரப் பகிர்வு என்பவற்றின் அவசியத்தையும் கருத்தில் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்.

வியன்னாவில் 1989 ஜனவரியில் நடைபெற்ற கூட்டத்தின் பின் எல்லா சாதகமான தீர்மானங்களும் எடுக்கப்பட்டுவிட்டன என சுட்டிக்காட்டிய பேராயர் அவற்றை நடைமுறைப்படுத்துவதேயன்றி வேறு தீர்மானங்கள் எடுப்பது தேவையற்ற விடயம் என்றும் தெரிவித்தார்.

## சோல் மறைமாவட்டம் ஆபிரிக்காவுக்கு குருக்களை அனுப்புகிறது

ஆபிரிக்காவிலே பணிபுரிவதற்காகசோல் மறைமாவட்டத்திலிருந்து இரு குருக்கள் ஓராண்டுப் பயிற்சிக்காக அயர்லாந்து சென்றுள்ளனர். இவர்களே அங்கிருந்து செல்லும் முதற் குருக்களாவர்.

இவர்கள் இருவரும் தமது பயிற்சி முடிந்ததும் கென்யாவுக்குப் புறப்படுவர்.

இவர்களது பிரியாவிடைக்காக சோல் பேராலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் திருஉரையாற்றிய கருதினால் கிம் கொரிய திருச்சபை பிறநாட்டுக்கு பணியாளர்களை அனுப்பும் இந்நிகழ்ச்சி வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததென்றும், தமது பணியாளரைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் கொரியத் திருச்சபை உயிரூட்டம் பெறுமெனவும் கூறினார்.

கென்யாவில் மக்காக்கோஸ் ஆயர் ஜோசவ் கியோக்கோவினது அழைப்பின் பேரிலேயே இவ்விரு குருக்களும் மறைப்பணிபுரிய முன்வந்துள்ளனர்.

## தொடர்பு சாதனங்களில் பெண்கள் ஒருபுறச்சாய்வாக சித்திரிக்கப்படுகின்றனர்

பெங்களூரின் "தொடர்பு சாதனங்களின் மூலம் பெண்களுக்கு சக்தியூட்டுதல்" என்னும் கருத்தரங்கு ஆகஸ்ட் 26 28 ஆம் திகதிகளில் நடைபெற்றது. தொடர்பு சாதனங்களில் தொழில்புரியும் பல பெண்கள் இதில் கலந்து கொண்டனர்.

இவர்கள் தொடர்பு சாதனங்களிலும், விளம்பரங்களிலும் பெண்கள் ஒரு புறச்சாய்வாக சித்திரிக்கப்படுகிறார்கள் என்றும் இவ்விதமாகக் காட்டப்படுவதைத் தவிர்க்க திட்டம் வகுக்கப்படவேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தனர்.

திரைப்பட விமர்சகரும் ஒலிபரப்பாளருமான அமிதா மல்லிக்பெண்கள் தங்கள் நலன் காக்கும் அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளாதபடியால் தான் இவ்வாறு நடத்தப்படுகிறார்கள் எனக் கூறினார்.

இந்தோனேசியாவைச் சேர்ந்த ஹெற்றி சிரேகார் தொடர்பு சாதனங்கள் பெண்களை அறிவும் பலமும் அற்ற மனப்பண்புள்ள, உணர்ச்சிவசப்படுபவர்களாக, தீர்மானமெடுக்க முடியாதவர்களாக சித்திரிக்கின்றனர், பெண்களுடைய அபிலாஷகள் சரிவர பிரதிபலிக்கப்படுவதில்லை எனக் கூறினார்.

## குருத்துவ அழைத்தல் அதிகரிப்பு

காலி மறைமாவட்டம் ஆரம்பித்து 97 ஆண்டுகள் ஆகின்றது. ஆனால் அங்கு பணிபுரியும் குருக்களில் 90 வீதமானவர்கள் பிறவிடங்களைச் சேர்ந்தவர்கள். சென்ற ஆண்டில்தான் இம்மறைமாவட்டத்தின் முதற் தமிழ்க் குரு திருநிலைப்படுத்தப்பட்டார்.

இம்மறைமாவட்டத்தில் அரைவாசிப்பேர் தமிழ் பெருந்தோட்டத் தொழிலாளர்களே. தற்போது இத்தமிழ் இளைஞருட் பலர் குருத்துவ வாழ்வை விரும்புகின்றனர்.

இரத்தினபுரியில் ஆகஸ்ட் 9ஆம் திகதி நடைபெற்ற 3 நாள் குருத்துவப் பாசறையின் பின்னர் காலி ஆயர் டொண்சில்வெஸ்டர் அவர்கள் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

## அருணாசலப் பிரதேசத்தில் கிறிஸ்தவர் துன்புறுத்தப்படுகின்றனர்

இந்தியாவின் வட கிழக்குப் பாகத்திலுள்ள அருணாசலப் பிரதேசத்தில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப் படுவதாகத் தெரிய வருகிறது கோயில்கள் இடிக்கப்படுவதும் கிறிஸ்தவர்கள் கைது செய்யப்படுவதும் அன்றாட நிகழ்ச்சிகளாக இருக்கின்றன.

அருணாசலப் பிரதேசத்தினுள் புகுவதற்கு இந்தியர்கள் கூட அனுமதி பெற்றேயாக வேண்டும். பௌத்த, இந்துத் தலைவர்களுக்கு இலகுவாக அனுமதி அளிக்கப்படுகிறது. ஆனால் கிறிஸ்தவ தலைவர்களுக்கு பன்முறை மறுக்கப்பட்டுள்ளது.

பொது நிலையினரின் பணியால் இப்பிரதேசத்தில் பெருந்தொகையான மக்கள் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியுள்ளனர்.

ஜூலை 28ஆம் திகதி பேரா என்னும் கிராமத்தில் இரு பொலிசார் வந்து அங்கிருந்த கோயிலை மூன்று நாட்களில் இடிக்குமாறு கட்டளையிட்டனர். இதற்கு ஒரு காரணமும் காட்டப்படாதபடியால் கிராமத்தவர் மறுத்துவிட்டனர்

ஆகஸ்ட் முதலாம் திகதி பொலிசார் திரும்பி வந்து கிராமத்திலுள்ள ஏழு இளைஞர்களைக் கைது செய்தனர். இவர்களில் ஓர் உபதேசியாரும் வேதாகமக் கல்லூரியில் கற்றுக் கொண்டிருக்கும் ஓர் இளைஞரும் அடங்குவர். இந்த இளைஞரை விடுதலை செய்வதற்கு ரூபா 3500 கேட்கப்பட்டது. கிராமமக்கள் மிகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த போதிலும் இப் பணத்தைச் சேகரித்துக் கொடுத்தனர். இக்கிராமத்திலுள்ள 54 குடும்பங்களில் 49 கத்தோலிக்க குடும்பங்கள்.

இப்பூர்வ குடிகளில் கல்வியறிவுள்ள சிலர் இந்த பிரச்சினைகளெல்லாம் பதவிமோகம் பிடித்த ஓர் அரசாங்க அமைச்சரால் தூண்டப்பட்டவை எனக் கருதுகின்றனர்.

இது குறித்து பிரதமருக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது.

## கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எம் கருத்து

### சுதந்திர உணர்வு

அறுபது ஆண்டுகளுக்கு முன் 1931 மார்ச் 2 ஆம் திகதி பிறந்த மிஹாயில் கொர்பசோவ் 1917 ஆம் ஆண்டு நடைபெற்ற அக்ரோபர் புரட்சியைத் தொடர்ந்து சோவியத் ஒன்றியத்தில் உருவாக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு முறை சிதைவுறக் காரணமானார்.

70 ஆண்டுகளாக ரஷ்யாவின் போக்கு மார்க்ஸிய கொள்கைகளால் மக்களை கட்டுப்படுத்துவதாக அமைந்தது. 80 மாதங்களுக்கு முன் சோவியத் ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட மிஹாயில் கொர்பசோவ் திறந்த போக்கையும், புதிய அமைப்பையும் தமது கொள்கையில் கொண்டு வந்ததன் காரணமாக புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவர முடிந்தது.

உலகின் வல்லரசுகள் ஒருவரை ஒருவர் சந்தேகக் கண் கொண்டு நோக்கியதன் காரணமாக உலக நாடுகள் இடையே பல்வேறு பிரச்சனைகள் தீர்க்க முடியாதவையாக வளர்ந்துகொண்டு வந்தன. ஆனால் மிஹாயில் கொர்பசோவின் திறந்த கொள்கை உலகின் போக்கையே மாற்றிவிட்டது.

பேர்லின் சுவர் இடிக்கப்பட்டது; கிழக்கு மேற்கு என பிரிந்திருந்த இரண்டு ஜேர்மனிகளும் ஒன்றாயின. போலந்து, ஹங்கேரி, ருமேனியா, செக்காஸ்லொவேக்கியா ஆகிய நாடுகளில் பாரிய மாற்றங்கள் உருவாகின. இதுவரை காலமும் கம்யூனிச ஆட்சியில் சிக்குண்டிருந்த இந்நாடுகளில் அரசியல் பொருளாதார மாற்றங்கள் அதிவேகமாக ஏற்படும் அளவுக்கு கொர்பச்சோவ் வழிவகுத்தார்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு சோவியத்துடன் இணைக்கப்பட்ட சுதந்திர நாடுகளான லித்துவேனியா, எஸ்டோனியா, லற்வியா ஆகிய பால்டிக் நாடுகள் சுதந்திரப் பிரகடனம் செய்துகொண்டன.

இதுவரை காலமும் இருந்து வந்த கிரெம்ளினின் இருண்ட அரண்களினுள் தடுக்கப்பட்டிருந்த சுதந்திரம், சனநாயகம், மனித மாண்பு ஆகியவற்றை சுவைத்து இன்புறுவதற்கு மக்கள் தவியாகத் தவிக்கும் இவ்வேளையில் அதனை எவருமே தடுத்து நிறுத்த முடியாது உள்ளது.

லெனின், ஸ்ரலின் ஆட்சியின்போது ஏற்பட்ட சர்வதிகாரப்போக்குகளும், அநியாயங்களும், அட்டூழியங்களும் இப்பொழுது அம்பலமாக்கப்பட்டு வருகின்றன. லட்சக்கணக்காக மக்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட புதைகுழிகள் மீண்டும் திறக்கப்பட்டு மக்கள் கண்டுகொள்ள சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படுகின்றன.

மக்களுக்கு சுதந்திர உணர்வை மீண்டும் உருவாக்கி, தமது வாழ்வில் தடைப்படுத்தப்பட்டிருந்த நன்மைகளை, உண்மைகளைக் காண சந்தர்ப்பம் ஏற்பட்டதால், கம்யூனிசத்தின் பிடியில் இறுகியிருநத மக்கள் மாற்று முறைகளைப் பற்றி சிந்திக்கவும், கடைப்பிடிக்கவும் ஆவல் கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.

அண்மையில் கொர்பச்சோவுக்கு எதிராக சதிப்புரட்சி செய்தபோது, புரட்சித் தலைவர்கள் எதிர்பார்த்ததைப்போல ராணுவ பலத்தைக்கண்டு ரஷ்ய மக்கள் அஞ்சி அடங்கிப் போயவிடவில்லை. மக்கள் தாங்கிகளை எதிர்த்து, வீதிகளுக்கு வந்து, சீர்திருத்தவாதிகளுக்கு ஆதரவு தெரிவிதது நீதிக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடினர்.

உலகமே ஒரு மாபெரும் கிராமமாகி வரும் இக்காலததில் ஏனைய மக்களிடையல் நிகழும் பாரிய மாற்றங்களிலிருந்து தனது சொந்த மககளை பிரித்து வைப்பது அசாத்தியமானது எனபதற்கு சோவியத் சிறந்த எடுத்துக்காட்டு.

# சோவியத்தில் மாறுதல்

சுமார் முக்கால் நூற்றாண்டு காலமாக சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியானது கிழக்கு ஐரோப்பா வடக்கு ஆசியா அடங்கிய நிலப்பகுதி முழுவதையும் தனது இரும்புப் பிடிக்குள் வைத்திருந்தது. வெளிப்படையில், தம்மை அடக்கியாண்ட முதலாளித்துவ வகுப்பினரை 1917 அக்டோபர் புரட்சியின் மூலம் கவிழ்ந்துவிட்ட தொழிலாளரின் கட்சியான இது, தனது பல்வேறு குழுக்களின் மூலம் சோவியத் ஒன்றிய மக்கள் வாழ்க்கையின் சகல கூறுகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. வேலைகளெல்லாம் படைமுறைப்படுத்தப்பட்டு, உணவு பங்கீடு செய்யப்பட்டது. மார்க்ஸீய கொள்கை மக்கள் மீது திணிக்கப்பட்டது. மதம் விரட்டியடிக்கப்பட்டது. எல்லாவித எதிர்ப்புகளும் ஒற்றர் படையினதும், இராணுவத்தின் மைய நிலையங்களினதும் உதவியுடன் நசுக்கப்பட்டன. பாட்டாளிமக்களின் சர்வாதிகார ஆட்சிக்காக உழைப்பதே கட்சியின் வேலை எனக் கருதப்பட்டது. ஆனால் ஸ்ரலினது கரங்களில் அது கொடிய அடக்குமுறையின் கருவியாகவும், பல்லாயிரக் கணக்கான மக்களை கருவறுக்க உதவிய ஓர் அமைப்பாகவும், மாறியது.

70 ஆண்டுகளாக இத்தகைய பயங்கரநிலை என்றும் தொடரும் போல் தோன்றியது. தம்மை "ஒரு பரிமாண" உயிர்களாக மாற்றிய இந்த அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கு இயலாமலோ அல்லது மனமின்றியோ, ரஷ்ய மக்கள் செயலற்று அடங்கிக் கிடந்தனர், ஆனால் டொல்ஸ்டோய், செக்கோவ், பாஸ்டர்னாக் போன்ற இலக்கிய கர்த்தாக்களை அளித்த ரஷ்ய மக்களின் வீரியத்தை எப்போதும் அடக்கி வைப்பது இயலாதாயிற்று. உலகமே ஒரு மாபெரும் கிராமமாகி வரும் இக்காலத்தில் ஏனைய மக்களுக்கிடையில் நிகழும் பாரிய மாற்றங்களிலிருந்து சோவியத் நாட்டை பிரித்து வைப்பது அசாத்தியமாயிற்று.

பின்பு மிகாயில் கொர்பசோவ் பதவிக்கு வந்தார். தமது கொள்கையில் திறந்த போக்கையும், புதிய அமைப்பையும் கொண்டுவந்தார். கிரெம்ளினின் இருண்ட அரண்களினூடாக சுதந்திரம், சனநாயகம், மனிதமாண்பு ஆகியவற்றின் தூய காற்று பலமாக வீசியது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் ஐரோப்பாவின் பெரும்பகுதி இரும்புத் திரைக்குப் பின்னே சென்றுவிட்டது. இந்நாடுகள் விரைவில் சுதந்திர வேட்கை கொண்டெழுந்தன. பேர்லின் சுவர் இடிக்கப்பட்டது. ஜேர்மனி ஒன்றாயிற்று. போலந்து, ஹங்கேரி, ருமேனியா, செக்கேஸ்லொவேக்கியா, பல்கேரியா ஆகிய நாடுகள் தமது கம்யூனிஸ்ட் சர்வதிகாரிகளைத் தூக்கியெறிந்தன.

அத்தோடு நிற்கவில்லை. இந்நிலை சோவியத் ஒன்றியத்தினுள்ளும் புகுந்தது. முன்பு சுதந்திர நாடுகளாயிருந்த லித்துவேனியா, எஸ்டோனியா லற்வியா ஆகிய பால்டிக் நாடுகள் இரண்டாம் உலக யுத்தத்தின் பின் சோவியத் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டன. கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸம் ஒழிக்கப்பட்டதும் இந்நாடுகளும், தமது பொருளாதாரம் ஏனைய குடியரசுகளுடன் பின்னிப்பிணைந்திருந்த போதிலும், அங்கு பெரியதொரு ரஷ்ய இராணுவம் நிலைகொண்டிருந்தபோதிலும் சுதந்திரப்பிரகடனம் செய்தன. ஜோர்ஜியா, மொல்டேவியாவும் இதைத் தொடர்ந்தன. ஒன்றியத்தின் 15 குடியரசுகளில் 10 அதிலிருந்து நீங்கப் போவது தெளிவாயிற்று—இவ்வாறு உடைந்துகொண்டு போகும் சோவியத் ஒன்றியம் ஒரு நாடாக தப்பிப் பிழைக்குமா என்பது கேள்விக்குறியாயிற்று.

கொர்பசோவ் தனது சீர்திருத்தங்களை, முக்கியமாக விவசாயத்தைப் பொறுத்தமட்டில் அரைமனதாகவே செய்தார். பால்டிக் நாடுகளின் சுதந்திரப் பிரகடனத்தை எதிர்த்ததுடன், தாம் இன்னும் சோஷலிஸவாதி எனக் கூறினார். ஆனால் கட்சியின் தீவிரவாதிகளோ அவர் நாட்டை பொருளாதார, அரசியல் அழிவுக்கு இட்டுச் செல்கிறாரெனக் குற்றம் சாட்டினர். ஸ்டாலின் நிறுவி, பிரெஸ்நெவ் பேணிப் பாதுகாத்த அமைப்பு அழிந்துவிடுமென அவர்கள் அஞ்சினர். தாம் அனுபவித்து வந்த செல்வாக்குகளை இழக்கவேண்டுமென அஞ்சினர் இந்த ஆபத்தை நீக்குவதற்குக் கடைசி முயற்சியொன்றைச் செய்தனர். ரஷ்யா, கசாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகியன ஒன்றியத்தின் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதாக இருந்தன. அதற்கிடையில் இராணுவத் தளபதிகளும், ஒற்றர் படைத் தலைவர்களும் ஒரு திடீர் அரசியல் மாற்றத்தைக் கொண்டுவந்தனர். கொர்பசேவ் கிரிமியாவில் சிறைவைக்கப்பட்டார். தாங்கிகள் வந்தன.

ஆனால் புரட்சித் தலைவர்கள் நினைத்தபடி இராணுவ பலத்தைக் கண்டு ரஷ்ய மக்கள் அஞ்சி அடங்கிப் போய்விடவில்லை. மாஸ்கோவிலும், லெனின் கிராடிலிலும் தாங்கிகளை எதிர்த்து அவர்கள் வீதிகளில் வந்து, சீர்திருத்தவாதிகளுக்கு ஆதரவு தெரிவித்து நீதுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் குரலெழுப்பினர். மன்னுரிமைக் காவலரான போரிஸ் யெல்ற்ஸின் அவர்களது அபிமான வீரரானார். அவரது துணிவு, உறுதி, பேச்சுவன்மை ஆகியவற்றால் வீறுகொண்டெழுந்த மக்கள் முன்னே தாங்கிகள் ஸ்தம்பித்துவிட்டன. திடீர் புரட்சி வீழ்ச்சியடைந்தது. அது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வேளை. மக்கள் சக்தியின் மாபெரும் சாதனை.

அடுத்துவந்த எதிர்விளைவு வேகமாகவும் முன்னறிகுறியாகவும் இருந்தது. கட்சியின் செயலாளர் நாயகம் பதவியிலிருந்து கொர்பசோவ் விலகினார். கட்சியின் மத்திய குழுவையும் கலைக்கும்படி கூறினார். ஆகஸ்ட்மாத முடிவில் சோவியத் பாராளுமன்றம் நாட்டில் தனது செயற்பாட்டை நிறுத்திக்கொண்டது. சோவியத் இராணுவத்திலிருந்த மையநிலையங்களை மூடுமாறு யெல்ற்ஸினும் கொர்பசோவும் கட்டளையிட்டனர்.

அதுவே இறுதி அடி. கட்சியின் செல்வாக்கு அதனோடு ஒழிந்தது. அதன் அமைப்பு சிதைந்துவிட்டது. அதன் 15 மில்லியன் அங்கத்தவர்கள் தமது கட்சி விசுவாசத்தை புனரமைக்க வேண்டியவராயினர்; கட்சி ஒழிந்தது.

ஆனால் கட்சி அழிவுற்றதன் விளைவாக, முழு அரசியல் அமைப்பும், கம்யூனிஸ்ட் அமைப்பு முறையுமே சிதைவுற்றுப் போயின. நாட்டின் நிர்வாக அமைப்புகள் அனைத்தும் கட்சிக் குழுக்களின் கட்டுப்பாட்டுடன் தொடர்புற்று இருந்தமையால் இப்போது அவ்விடம் வெறுமையாயிற்று. அவ்விடத்தை நிரப்புவது எது!

ஏற்கெனவே நிர்வாக யந்திரம் குடியரசுக்களின் கைக்கு மாறி மாஸ்கோவுக்கு சார்பில்லாத தேசியக் குழுக்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. பிரதேச சுயநிர்ணய அமைப்புகள் தோன்றி, குடியரசுகள் கிரெம்ளினின் அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் எடுத்துக்கொண்டன.

ஒரு மத்திய அதிகாரபீடம் இருக்க வேண்டுமென்பதற்காக சோவியத் பாராளுமன்றம் செப்டெம்பர் 5ஆம் திகதி சோவியத் ஒன்றியத்தின் மிக மையபபடுத்தப்பட்ட அரசியலமைப்பைக் குலைத்து, குடியரசுகளின் கூட்டுக குழுவாக அதை மாற்றுவதென தீர்மானித்தது. பழைய மார்க்ஸிய பொருளாதாரக் கொள்கையை நீக்கி மேற்கத்திய முறையிலான பொருளாதார அமைப்பை அனுமதிக்கவும் தீர்மானித்தது. புதிய ஒன்றிய ஒப்பந்தம் குடியரசுகள் தமது பங்களிப்பு எதுவெனபதை தீர்மானிககவும் இடமளிக்கிறது. சுதந்திரம கோரும் குடியரசுகளை பேச்சுவார்த்தை நடத்தவும் இது அனுமதிக்கிறது. ஆனால் ஒரே இராணுவம், அணு ஆயுதம் போன்றவற்றின் மீது ஓரே கட்டுப்பாடு ஆகிய முறைகளை அது மாற்றவில்லை.

வீட்டுக்கொரு பாதுகாவலன் · உங்கள்பங்கில் நடைமுறைப்படுத்துங்கள்

இளைஞர் உலகம்

# ஏற்றருளும் யேசுவே!

எப்போது நத்தார் தினம் வரும் என்று ஏங்கியவளாக நாட்காட்டியை ஒவ்வொரு நாளும் பார்த்துக் கொண்டிந்தாள் அமுதா. நத்தார் தினம் விரைவாக வரவேண்டுமென்பது அவளது விருப்பம். வரவிருக்கும் நத்தாரை எண்ணி மகிழ்ந்தாள். அம்மா தைத்துக் கொடுத்த புதிய ஆடைகள், மேல் நாட்டிலிருந்து அப்பா அனுப்பிய அன்பளிப்புப் பொருட்கள் எல்லாம் அவளுக்கு மேலும் சந்தோஷத்தைக் கொடுத்தன. அமுதா தான் குடும்பத்தின் செல்லப்பிள்ளை. அவளுடைய பெற்றோர் பெரும் பணக்காரர். அமுதாவுக்கு ஏழைகள் என்றாலே பிடிக்காது. பாடசாலையிலும் சரி, வெளியிலும் சரி ஏழைச் சிறுவர்கள் யாரையும் கண்டால் எள்ளிநகையாடுவாள். ஒரு பொழுதும் அவர்களுடன் விளையாடுவதற்கேனும் போக மாட்டாள். அவளுக்கு தான் பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளையென்ற செருக்கு.

அன்று மறைக்கல்வி ஆரம்பமாவதற்கு சில நிமிடங்களின் முன்னர் அந்த வகுப்பு மாணவிகள் எல்லாம் நத்தார் தினத்தைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தனர். அமுதாவின் வகுப்புத் தோழிகளிற் பலர் நத்தார் தினத்திற்கு தங்கள் வீட்டிற்கு வரும்படி அழைக்க அமுதாவும் அதற்கு சம்மதித்தாள். வதனி அமுதாவின் வகுப்பில் படிக்கும் மாணவி. அவள் தனது வீட்டிற்கும் அமுதாவை வரும்படி கேட்டாள். ஆனால் அமுதா மறுப்புத் தெரிவித்து விட்டாள். வதனியின் அப்பா ஒரு விவசாயி. அதனால் அவர்கள் ஏழைகள் என்றும், தங்களை விட அந்தஸ்தில் குறைந்தவர்களென்றும் நினைத்தாள் அமுதா. அதுதான் அவளின் மறுப்புக்குக் காரணமாய் இருந்தது.

மறைக்கல்வி வகுப்பு முடிந்து எல்லோரும் வீடு சென்று விட்டார்கள். அன்று இரவு அமுதா மறைக்கல்வி வகுப்பில் படித்தவைகளை மீண்டும் ஒரு தரம் எடுத்துப்பார்த்தாள். ''யேசுநாதர் மன்னாதி மன்னராக இருந்தும் ஒரு ஏழையாகத்தான் பிறந்தார்; ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்; வறுமையில் வாழ்பவர்கள் எம் நண்பர்கள்'' என்ற வசனங்களைப் படித்தாள். ''நத்தாரை நாம நல்ல முறையில் கொண்டாடுறதா இருந்தா ஏழைகளுக்கு உதவி செய்யிறதிலயும், உள்ளத் தூய்மையோட செபம் செய்வதினாலயும் தான் சிறப்பாகக் கொண்டாடலாம்.'' மேலும் மத்தேயு நற்செய்தியில சொல்றது போல'' நான் பசியாயிருந்தேன், நீங்கள் எனக்கு உண்ணக் கொடுக்கவில்லை. தாகமாயிருந்தேன் எனக்குக் குடிக்கக் கொடுக்கவில்லை. அந்நியனாய் இருந்தேன் என்னை வரவேற்கவில்லை. ஆடையற்று இருந்தேன். என்னை உடுத்தவில்லை ................'' என்ற வசனங்களையும் கண்டாள். அப்பொழுது முதல் அவளும் ஏழைகள் மேல் இரக்கம் கொள்ள நினைத்தாள்.

அன்று நத்தார் தினம். காலையில் கோயிலுக்கு சென்று பாவசங்கீர்த்தனம் செய்து விட்டு வீட்டை நோக்கிவந்து கொண்டிருந்தாள் அமுதா. அவளுக்கு முன்னே நின்ற ஒரு சிறிய மரத்தின்கீழ் தன் போன்ற ஒரு சிறுமி கிழிந்த உடைகளுடன் நிற்பதைக் கண்டாள். அந்தச்சிறுமியிடம் சென்று அவளைப்பற்றிக் கேட்ட பொழுது அவளது அப்பா, அம்மா எல்லோரும் பிரச்சனைகளில் அகப்பட்டு இறந்து விட்டதாகவும் அதனால் அந்தச் சிறுமி பிச்சை எடுத்துத் திரிவதாகவும் அறிந்து கொண்டாள். உடனே தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று, அவளுக்கும் புதிய உடுப்புகள் எல்லாம் கொடுத்து, அவளைத் தனது தங்கையாக ஏற்றுக் கொண்டாள். அவளது பெற்றோரும் அச்சிறுமியைத் தங்கள் புதல்வியாக ஏற்றுக் கொண்டார்கள்.

நத்தார் பூசைக்கு அமுதா தன் புதிய சகோதரியுடன் கோயிலுக்குச் சென்றாள். பூசை முடிய பாலன் குடிலின் முன் முழந்தாள் படியிட்டு ''ஆண்டவரே! நீர் உள்ளத் தூய்மையில்லாதவர்களை வெறுக்கின்றீர், ஆயினும் கூட பாவிகளை மன்னிக்கின்றீர். என்னையும் மன்னித்தருளும், நான் இப்பொழுது நல்ல பிள்ளையாக உம்மிடம் வந்திருக்கின்றேன். என்னை ஆசீர்வதித்தருளும், மனம்மாறி வந்த என்னை உமது பிள்ளையாக ஏற்றருளும் யேசுவே!'' என்று மன்றாடினாள். பின்னர் தான் வரமாட்டேன் என்று சொன்ன வதனியின் வீட்டிற்கு போவதற்கு ஆயத்தமாகின்றாள்.

இ. அந்தோனிதாஸ் டலீமா.

புனித சவேரியார்
குருத்துவக்கல்லூரி
கொழும்புத்துறை.

## குருசு முத்தணையின் கிசு கிசு - 69

**குருசு :** எங்க அன்னம் பிள்ளையள் கோயிலுக்கு போட்டுதுகளோ!

**அன்னம் :** போனகிழமை தானே முதல்நன்மை எடுத்ததுகள், அதால கனக்க படிக்க கிடக்காம். அது தான் ரியூசனுக்கு போட்டுதுகள் அண்ணே!

**குருசு :** அப்ப அதுகும் ஒரு சோதினை தான்போல. சோதினை முடிஞ்சா புத்தகத்தை மூடுறமாதிரித் தான் இப்ப அருட்சாதனம் எடுக்கும் வரைக்கும் குதூகலம். முடிய அந்த மகிமை அறியாததுகள் இனி திருவிழா, திருமணம் வந்தாத்தான் நினைப்பினம் போல.

**அன்னம் :** இப்ப கோயில் குளம் எண்டு திரிஞ்சா சோதினைக்கு எங்க படிக்கிறது அண்ணே!

**குருசு :** அன்னம் இதை நீயே சொல்லேக்க பிள்ளைகள் எப்படி உணருங்கள்? அதாலதானே இந்த சோதினைகளும் முடியாம நடக்குது. ''ஆலயம் தொழுறது வேலை மினக்கேடு.'' எண்டு போட்டு அகதியா ஓடேக்க மட்டும் ''கடவுளே! கடவுளே!'' எண்டு ஓடி ஒளிக்கத்தான் இப்ப கோயிலைப் பயன் படுத்திறியள் போல.

## எழுக இளைஞனே

இளமை என்ற வளமையில்
பவனிவரும் இளைஞனே,
உன்னுடன் உரையாட
விழைகிறேன் நானுமே!

விரக்தி வலையினுள்
அகப்பட்ட நீயுமே!
விரக்தியை விரட்டிட
விழித் தெழு இளைஞனே!

போதையின் வாதையால்
பாதைமாறும் சமூகத்தை
மீட்டிட,
எழுந்திடு இளைஞனே!

விரக்தி என்ற கருவியால்
ஒடிக்கப்பட்ட உள்ளங்களை
பக்குவப் படுத்திட
விரைந்தெழுவாய் இளைஞனே!

சாதியை அறுத்தெறிய
சமத்துவத்தை உருவாக்கிட
புதுவாழ்வை புகுத்திட
புதியவனாக எழுவாய்
இளைஞனே!

நிலான் சந்தாம்பிள்ளை, முருங்கன்.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 5 | எம் விழிகளின் ஒளி யேசு |
| சுடர்: 4 | எம் வாழ்வின் வழி யேசு |

என்னகம் : 4

அன்புக் கண்மணிகாள்!

06-10-1991 ஆசிரியர் தினத்தை அகம் மகிழ அழகாகக் கொண்டாடினீர்கள். இத்தினத்தில் பல நிகழ்ச்சிகளை ஆசிரியர் சேவையைப் பாராட்ட நடத்தினீர்கள்.

''எழுத்தறிவித்தவன் இறைவன்'' என்று வாயாரப்புகழ்ந்தீர்கள். வளமாக வாழ வாழ்த்தினீர்கள்.

அன்புக் கண்மணிகாள், உங்கள் வாழ்வில் எத்தனையோ ஆசிரியர்களைச் சந்தித்து அவர்களோடு அன்புள்ளத்துடன் உறவாடியிருப்பீர்கள். நீங்கள் மகிழ்வோடு நினைவு கூர்ந்த வேளைகளில் அவர்கள் படும் துன்ப துயரங்களையும் சிறிது நினையுங்கள்.

காலத்தின் கோலத்தால், சூழ்நிலைகளின் பாதிப்பால் ஆசிரியர் மாணவர் உறவில் இடைவெளிகளை உண்டாக்கும் காரணிகளை அறிந்து அவற்றை அகற்ற முனையுங்கள். உங்கள் வாழ்வின் ஒளியேற்றும் தீபங்களாக ஆசிரியர்கள் என்றும் இருக்க எம்முதல்வர் இறையேசுவிடம் அல்லும் பகலும் இறைஞ்சுங்கள்.

அன்பின் அன்பு விழி

## ஆசிரியர்

ஆய்வு:

ஆசிரியர்களில் உள்ள ஐந்து எழுத்துக்களையும் எடுத்துப் பிரித்து, சேர்த்து சில சொற்களை ஆக்கி அவற்றின் கருத்துக்களையும் இங்கே தருகின்றேன். உங்கள் உள்ளியல்புக்கேற்ப படித்துப் பயன் பெறுங்கள்.

ஆ : இசை, இரக்கம், பசு, பெண்மரை, பெண்ணெருமை, வியப்பு, ஆன்மா, காளை, பாதை.
சி : இகழ்ச்சிக் குறிப்புச் சொல்.
ஆசி : நிந்தை, பாம்பின் பல், பிரார்த்தனை, நச்சுப்பல், விபத்து, வேண்டல், யுத்தம், வாழ்த்து.
ஆரி : சோழன், துர்க்கை, பார்வதி, மாலை, மேன்மை, அழகு, அருமை, கதவு.
ஆர் : அருமை, ஆர்த்தி, கூர், கொன்றை, சோதி, நிறைவு, நுண்மை, பாகு, பூமி, அழகு.
ஆயர் : இடையர், யாதவர், கோபாலர், அமுதர்,
ஆரியர் : ஆசிரியர், குரு, ஆரிய தேசத்தவர், மிலேச்சர், வைத்தியர், நாகரிகமுள்ளவர்கள்.
ஆசிரியர் : உபாத்தியாயர், குரு, நூலாசிரியர்.
சிரி : அம்பு, கொலைசெய்வோன், வாள், வெட்டுக்கிளி, பாணம்.

–தொகுப்பு அன்பு விழி.

## இறைமக்களாக

விண்ணுலகின் பெரியவர்களே — நீங்கள்
மண்ணுலகின் சிறுவர்களே,
இன்பமுடன் இறைவாழ்வில்
என்றுமே இறைவனைக்காணுங்கள்
நற்செய்தி அறிவிக்க சென்றிடுவீர்கள் — நீங்கள்
நல்லாயனில் சேர்ந்திடுவீர்கள்
குறை நிறைந்த மானிடரின்
குறைபோக்க சென்றிடுவீர் செல்வர்களே.
இயேசுவை என்றும் உண்பவரே — நீங்கள்
இப்போதும் எப்போதும் வாழ்ந்திடுங்கள்
இறைமகன் மொழிந்தார் அவ்வாறே
இறைநம்பிக்கையை ஏற்றிடுவீர்கள்
சமாதான வழியை பின்பற்றுங்கள் — நீங்கள்
சன்மானம் தருவார் இறைவன்தான்.
சமாதான நெறியிலே இறையவனை
என்றும் அவரின் மக்களாகுங்கள்.

தீ. சந்தியோகு A 1

பாதுகாவலன்
PATHUKAVALAN

# தமிழ்நாடு பாடசாலைகளில் தமிழ் கட்டாய பாடம்

தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் பாடசாலைகளில் தமிழ் கட்டாய பாடமாக போதிக்கப்பட வேண்டுமென அறிவித்துள்ளார்.

தற்போது தமிழ்நாட்டில் போதனா மொழிகளான தமிழ் அல்லது ஆங்கிலத்துடன் வேறொரு மொழியும் கற்க வேண்டும்.

"இருமொழிக் கொள்கை யென்றால் அது தமிழையும் ஆங்கிலத்தையும் குறிக்குமே யொழிய ஆங்கிலத்தையும் வேறொரு மொழியையுமல்ல" என ஜெயலலிதா திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இந்தியாவில் அரசகரும மொழியாக இந்தி இருப்பினும் தமிழ்நாட்டில் அது கட்டாய பாடமாக போதிக்கப்படுவதில்லை. இந்தியாவின் 1650 மொழிகளுள் 15 மொழிகளே உத்தியோகபூர்வ மொழிகளாக உள்ளன.

தமிழ் நாட்டில் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கும் ஏறக்குறைய 100 பாடசாலைகள் உள்ளன. புதிய சட்டத்தின்படி தமிழ் படிக்க வேண்டிவரும். தமிழ் நாட்டில் நிரந்தரமாக வாழ்வோர் பெரும்பாலும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் தற்காலிகமாக வாழ்வோரிடமிருந்து பிரச்சினைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## புனித சவேரியார் ஆலயம் தீக்கிரை

புனித சவேரியாரது வருகையின் 400 ஆவது ஆண்டு நினைவாக ஜப்பானிலுள்ள யமகுச்சி என்னுமிடத்தில் 1952இல் கட்டப்பட்ட ஆலயம் கடந்த செப்டெம்பர் 5ஆம் திகதியன்று தீயினால் முற்றும் சேதமுற்றது. தீயணைப்புப் படையினர் 5 மணி நேரமாக முயன்றும் ஆலயத்தைக் காப்பாற்ற முடியவில்லை. 34 மீற்றர் உயரமான இரு கோபுரங்கள், முகப்பு ஆகியவற்றில் சில பகுதிகளே மீந்துள்ளன.

புனித சவேரியாரின் வாழ்வைச் சித்திரிக்கும் கண்ணாடி சன்னல்கள், இசைப்பெட்டி, சவேரியாரின் புனித பண்டங்கள் அனைத்தும் தீயினால் அழிந்து விட்டன. வர்ணக் கண்ணாடி சன்னல்கள் புனித சவேரியாரின் பிறப்பிடமான பம்ப்லோனாவின் நன்கொடையாகும். சுமார் 400,000 உல்லாசப் பயணிகள் ஆண்டுதோறும் இவ்வாலயத்தைத் தரிசித்தனர். அதன் இரட்டைக் கோபுரங்களும் யமகுச்சி மலைகளில் எதிரொலிக்கும் அதன் மணியோசையும் அவ்வூர் மக்களின் பெருமைக்குக் காரணமாயிருந்தன.

## பீற்றர் சஹோத்ரா விவகார அமைச்சரானார்

பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் சிறுபான்மையினர் விவகார ராஜாங்க அமைச்சராக பீற்றர் சஹோத்ரா என்னும் கத்தோலிக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்

கிறிஸ்தவ சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் முயற்சி பெனசீர் பூட்டோவின் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அப்போது சிறுபான்மையினர் திணைக்களம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு றுவின் யூலியஸ் என்பவர் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

நவாஸ் ஷரீபின் அரசாங்கம் பத்து மாதங்களின் பின் சஹோத்ராவைத் துணையமைச்சர் பதவியில் அமர்த்தியுள்ளது. ஏற்கெனவே அமைச்சரவையில் இரு சிறு பான்மையினர் உள்ளனர். இந்து சமயத்தவரான ராணா சந்தர் சிங், பார்ஸி மதத்தவரான பைராம் அவாரி என்போரே இவர்கள்.

பாகிஸ்தானிலுள்ள 3 மில்லியன் கிறிஸ்தவருள் 60 வீதமானோர் கத்தோலிக்கராவர்

## சர்வதேச மன்னிப்புசபை ஆசியநாடுகளுக்கு முன்னுரிமை

ஜப்பானில் சென்ற செப்டெம்பர் 7ஆம் திகதி முடிவுற்ற சர்வதேச மன்னிப்புச்சபையின் பொதுக்கூட்டத்தில் ஆசியாவுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்குரிய காரணங்கள்: சீனாவில்தான் மனச்சாட்சிக்காக சிறைப்பட்டோர் தொகை உலகிலேயே அதிகமாக உள்ளது. இலங்கையிலும், மயன்மாரிலும் கடும் மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்துள்ளன. சீனா, இந்தோனேசியா, தென் கொரியா, தாய்வான் ஆகிய நாடுகளில் மரணதண்டனைகள் அதிகரித்து வருகின்றன.

கடந்த ஆண்டில் ஜப்பானில் மரண தண்டனைகள் ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் தற்போது மரண தண்டனை பெற்ற 80 பேர் இருக்கின்றனர்.

மனச்சாட்சிக்காகச் சிறைப்பட்டோரை விடுவிக்கக் கோருதல், அரசியல் குற்றவாளிகளுக்குநியாயமானவிசாரணை கோருதல், சித்திரவதை, மரண தண்டனைகளை ஒழித்தல் இவைகளே சர்வதேச மன்னிப்பு சபையின் முக்கிய வேலைகளாகும்.

சபையின் பிரதிநிதிகள் ஜப்பானிய பிரதமர் டொஷிகி கைபுவைச் சந்தித்து, ராஜதந்திர உறவுகளின் மூலம் சீனா இலங்கை, மயன்மார் ஆகிய இடங்களில் மனித உரிமைகளைச் சீர்ப்படுத்த தமது செல்வாக்கைப் பாவிக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

## கத். திருச்சபை 'எயிட்ஸ்' நோய் பற்றி எச்சரிக்கிறது

இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை "எயிட்ஸ்" நோய் பற்றி எச்சரிக்கையாக இருக்கிறது என கொழும்பு மறை மாவட்ட வைத்தியசாலைப் பணிக்குருவாகிய பிதா சரத் பெரேரா கூறினார்.

தேசிய வைத்தியசாலைப் பணிக்குருவான பிதா மார்க்கஸ் ஆனந்தன்பிள்ளை எயிட்ஸ் தொடர்பான விடயங்களைக் கவனிக்கிறார் என்றும் அண்மையில் சர்வதேச எயிட்ஸ் மகாநாடுகளில் பங்குபற்றி நாடு திரும்பியுள்ளார் என்றும் கூறிய அவர் உல்லாசப் பிரயாணிகள் அதிகமாக வரும், கத்தோலிக்கர் பெருந்தொகையாக வாழும் மேற்குக் கரையோரப் பங்குகளில் இதுபற்றி அறிவூட்டவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

கரையோரப் பகுதியில் கத்தோலிக்கர் இன்னும் குருக்களின் சொல்லுக்கு செவிசாய்க்கிறார்கள். ஆகவே குருக்களுக்கும், ஆயர்களுக்கும் இதில் விசேட பொறுப்புண்டு என அவர் கூறினார்.

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட 39 எயிட்ஸ் நோயாளரில் 30 பேர் இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் மூன்று ஆண்டுகளில் இலங்கையில் 5000 பேருக்கு இந்நோய் தொற்றி விடலாமென வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

## குழந்தைகள் இயக்கம் விசுவாசத்தையும் மதிப்புகளையும் வளர்க்கிறது

இலங்கையின் "லக்றிவி" என்னும் குழந்தைகள் இயக்கம் 20 ஆண்டுகளுக்கு முன் ஓர் பங்கு அப்போஸ்தல இயக்கமாக ஆரம்பிக்கப்பட்டது. இப்போது 5-15 வயதுக்குட்பட்ட எச்சமயத்தினரும் அதில் சேரலாம். பெரும்பாலும் கிராமப்புறங்களிலுள்ள இயக்கத்தின் 300 குழுக்களில் 12 000 குழந்தைகள் உள்ளனர். இவர்கள் வாரந்தோறும் கூடி விசுவாசத்தை ஆழமாக்கி, அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுகின்றனர்.

ஒருவர் ஒருவருடைய சமயத்தை மதிக்க அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. கூட்டத்தின் நிகழ்ச்சிகளில் உரையாடல்கள். விளையாட்டுக்கள், குழுவேலை ஆகியன இடம்பெறுகின்றன.

தலைமைத்துவ ஆற்றல் வளர்ப்பது அவசியமென்றும், அத்தகைய ஆற்றல்கள் சமூக வாழ்விலும், சமய வாழ்விலும் பங்கெடுக்க அவர்களுக்கு உதவுமென்றும் இயக்கத்தின் ஆன்ம குருவான பிதா ஜஸ்டின் சில்வா கூறினார்.

லக்றிவி வருடாந்தம் ஒரு செயற்திட்டத்தை முன் வைக்கிறது. இவ்வாண்டுத் திட்டம் 'சூழல் பாதுகாப்பு''. சென்ற ஆண்டு "மனித மதிப்பீடுகளில் கல்வி'' என்பதே இயக்கத்தின் திட்டமாக இருந்தது.

### 6ஆம் மாத நினைவஞ்சலி



திருமதி வஸ்தியாம்பிள்ளை விக்ரோறியா மனோன்மணி

மலர்வு 1930-07-18 உதிர்வு 1991-05-19

மனுக்குலத்தைக் கொடிய சிலுவை மரணத்தினால் மீட்ட இரக்கமுள்ள யேசுவே! எம்மை விட்டுப்பிரிந்த வஸ்ரியாம்பிள்ளை விக்ரோறியா மனோன்மணி என்பவரின் பாவங்களை மன்னித்து அவர் ஆசித்த மோட்ச பேரின்ப வீட்டை அவருக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

இவரின் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
6/5, விதானையார் லேன்
ஈச்சமோட்டை.

## ஜப்பானிய வைத்தியர் மரணம்

சற்றுக் காலத்துக்குமுன் ஜப்பானில் வைத்திய வட்டாரங்களில் சர்ச்சையை ஏற்படுத்திய பிரசவவைத்தியரான டாக்டர் கிகூட்டா நொபோரு ஆகஸ்ட் 21ஆம் திகதி புற்றுநோயால் மரணமானார்.

இவர் கருச்சிதைவுகளைத் தடுப்பதற்காக 200 குழந்தைகளைத் தத்து எடுப்பதற்கு ஏற்பாடு செய்தார். ஆனால் சுவீகாரப் பெற்றோரை குழந்தையின் சொந்தப் பெற்றோராக பிறப்புச் சான்றிதழில் குறிப்பிட்டார். இந்தத் தவறுக்காக நீதிமன்றத்தில் அவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டதோடு ஆறுமாதங்களுக்கு தொழிலில் இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

மேன் முறையீடுகள் நிராகரிக்கப்பட்டபோதும் "உயிர் சட்டத்தைவிட முக்கியமானது'' என அவர் பத்திரிகைகளுக்கு தெரிவித்தார்.

இவரது வழக்கு எழுப்பிய சர்ச்சையின் காரணமாக 1987இல் சுவீகாரப் பிள்ளைகளை சொந்தப் பிள்ளைகள் எனப் பதிவு செய்யலாம் என அரசு சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தது.

ஜெனிவாவிலுள்ள சர்வதேச உயிருக்கான உரிமை நிறுவனம் டாக்டர் கிகூட்டாவுக்கு விருது வழங்கியுள்ளது. இந்த விருதைப் பெற்ற இரண்டாவது மனிதர் இவர். முதலாவது நபர் கல்கத்தாவின் அன்னை திரேசா.

## வெளியீடு

★ ஆகமஜோதி பஜனை இசைக்குறிப்புடன் வெளிவந்துள்ளது. விலை ரூ. 10/=

★ கிறிஸ்து பிறப்புக்கால திருவழிபாட்டு பதிலுரைச் சங்கீதங்கள் ஒலிப்பதிவு நாடாவிலும், இசைக்குறிப்பிலும் விரைவில் வெளிவரவுள்ளது.

கிடைக்குமிடம்:- திருவழிபாட்டு நிலையம்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**